இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள, நாடு முழுவதும் கிளை வலையமைப்பைக் கொண்ட எங்கள் வாடிக்கையாளரான ஒரு விசேடத்துவமான வங்கி, வங்கி மற்றும் நிதித் துறைக்கு பொருத்தமான வெளிப்பாட்டைக் கொண்ட, அதன் தற்போதைய வியாபாரத்தை மேம்படுத்த செயற்பாட்டுத் தலைமைத்துவத்தை வழங்க, கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு தகுதியான வேட்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

# பிரதான செயற்பாட்டு அதிகாரி

# (சிரேஷ்ட தரம்) உதவி பொது முகாமையாளர்

பிரதான செயற்பாட்டு அதிகாரி, தலைமை அலுவலகம் மற்றும் நாடு முழுவதும் உள்ள கிளைகளின் செயற்பாட்டு வலையமைப்பை இயக்குவதற்கு குறிப்பிட்ட முக்கிய குறிகாட்டிகளின் முன்னேற்றத்தைக் கண்காணித்து, தொடர்ச்சியான வணிக வெற்றியை உறுதி செய்வதற்காக, பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரியுடன் இணைந்து உத்திகளை தொடர்ந்து உருவாக்க, மாறும் வியாபாரத் தலைமைத்துவத்தை வழங்குவார். பிரதான செயற்பாட்டுத் தலைவராகுவதற்கு நீங்கள்:

- காலாண்டு அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட KPIகளை அடைய, பாரிய சிக்கலான செயல்பாடுகளை நிர்வகித்தல் மற்றும் புதுமையான வணிக மேம்பாட்டு உத்திகளை உருவாக்குதல்.
- பொருத்தமான கணக்கியல் கொள்கைகளை ஏற்றுக்கொள்வது மற்றும் நிதி விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்கான முக்கியத்துவத்தை அளித்து, வங்கியின் உட்கட்டுப்பாட்டு அமைப்புகள் மற்றும் முகாமைத்துவ தகவல் அமைப்புகளை செயற்படுத்த வேண்டும்.
- வங்கி வியாபாரத்தின் அன்றாட முகாமைத்துவ மூலோபாய நோக்கங்கள் மற்றும் ஒட்டுமொத்த இடர் கொள்கைக்கு ஏற்ப திறமையாக நடத்தப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.
- கிளையின் செயற்பாடுகளை தொடர்ந்து மீளாய்வு செய்து, முக்கிய வங்கி நடவடிக்கைகள் (கடன் வளர்ச்சி, சேமிப்பு திரட்டல் மற்றும் கடன் மதிப்பீடுகள்) நிலையான செயற்பாட்டு நடைமுறைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.
- வங்கியின் மூலோபாய திட்ட இலக்குகளை அடைய ஒட்டுமொத்த NPL (செயற்படாத கடன்) விகிதம், கட்டுப்படுத்தப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.
- செயற்பாடுகளை நிர்வகிக்கவும் மற்றும் வருடாந்த இலக்குகளை அடைய மாறும் வியாபார உத்திகளை உருவாக்க வேண்டும்.
- உற்பத்திப் பட்டியலை ஆக்கப்பூர்வமாக மதிப்பாய்வு செய்யவும், தற்போதைய சந்தை திறனை மதிப்பிடவும், சந்தைப்படுத்தல் மற்றும் வியாபார மேம்பாட்டுடன் கலந்தாலோசித்து உற்பத்தி மேம்பாட்டு உத்திகளைத் தொடங்க வேண்டும்.
- கிளை வலையமைப்பிற்குள் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முயற்சிகளை ஊக்குவிக்க உயர் தரமான தொழில்முறை மற்றும் சாதனை சார்ந்த திறனை வெளிப்படுத்த வேண்டும்.
- பிராந்திய முகாமையாளர்கள் மற்றும் கிளை முகாமையாளர்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களின் செயற்திறன் தரங்களை மதிப்பாய்வு செய்து, KPIs அமைப்பதன் மூலம் முடிவுகள் சார்ந்த வியாபார அனுகுமுறையை வெளிப்படுத்த வேண்டும்.
- செயற்பாட்டு ஊழியர்களின் பயிற்சி மற்றும் மேம்பாட்டுத் தேவைகளை அடையாளம் கண்டு, பொருத்தமான மேம்பாட்டு தீர்வுகளை வழங்க மனித வளத்துடன் (HR) ஒருங்கிணைக்க வேண்டும்.
- அனைத்து கிளைகளையும் மேற்பார்வை செய்யவும், கிளை இலாபத்தை நெருக்கமாக கண்காணிக்கவும், நிர்ணயிக்கப்பட்ட KPIs அடைய வழிகாட்டுதலை வழங்க வேண்டும்.

**வேட்பாளர்களின் முன் தேவைப்பாடுகள்:**

- உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து வங்கியியல் தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ நிறுவனத்திலிருந்து வியாபார முகாமைத்துவம், நிதி, சந்தைப்படுத்தல், வங்கி, பொருளாதாரம் அல்லது வேறு ஏதாவது துறையில் இளமாணிப் பட்டம்.
  அல்லது
- அங்கீரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் சக அங்கத்தவர். (உ-ம்: CIMA, CFA, CIM/SLIM, DBF/Bankers' Inst. UK, ACA, ACCA)
- வியாபார முகாமைத்துவம், நிதி, சந்தைப்படுத்தல், வங்கி அல்லது இதனையொத்த துறையில் ஒரு முதுமாணிப் பட்டம் (Master's) மேலதிக தகைமையாக கவனத்திற் கொள்ளப்படும்.
- அங்கீகரிக்கப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அல்லது உரிமம்பெற்ற விசேடத்துவ வங்கியில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 8 வருடகால அனுபவம் சகிதம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 15 வருடகால அனுபவம்.
- புத்தாக்க வியாபாரத் தலைமைத்துவத்தை வெளிப்படுத்துதல், தெளிவான இலக்குகளை நிர்ணயித்தல், கிளை வலையமைப்புடன் இணைந்து பணியாற்றுதல் மற்றும் நிறுவனத்தின் நோக்கங்களை வெற்றிகரமாக அடைதல்.
- நிர்ணயிக்கப்பட்ட KPI யை அடைவதற்கு உயர்தரத்திலான தொழில்சார் நிபுணர்கள் மற்றும் தனிப்பட்ட தீர்ப்பை வழங்கும் திறன்.
- சிறந்த பகுப்பாய்வு மற்றும் தீர்மானங்களை மேற்கொள்ளும் திறன் மற்றும் போட்டி சந்தை சூழல் அழுத்தத்தின் கீழ் பணியாற்றும் திறன் என்பவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.
- சிறந்த தகவல் தொடர்பு திறன்களைக் கொண்டிருக்க வேண்டும் மற்றும் பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் பணிப்பாளர் சபைக்கு வழக்கமான தரவேற்றங்களை வழங்க வேண்டும்.
- வங்கி மற்றும் இயக்கச் செயற்பாடுகள் தொடர்பான உள்நாட்டு ஒழுங்குவிதிகளில் முழுமையான திறமை வாய்ந்தவராக இருக்க வேண்டும்.

**வயதெல்லை:** 55 வயதிற்கு குறைந்தவர்கள் விரும்பத்தக்கது.

**சம்பளம்:** சரியான வேட்பாளருக்கு ஒரு கவர்ச்சிகரமான சம்பளப் பொதி காத்திருக்கின்றது.

விடயத் தலைப்பில் MSL Ref. 8106 எனக் குறிப்பிட்டு இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 10 நாட்களுக்குள் உறவினரல்லாத இரண்டு சான்று பகர்வோரின் தொடர்பு விபரங்களுடன் உங்கள் முழுமையான விண்ணப்பத்தை **mslrjobs@sltnet.lk** என்ற முகவரிக்கு அனுப்பவும்.

MSL Management Systems (Pvt) Ltd.
No: 08 Tickell Road, Colombo 08.
mslr@sltnet.lk
www.bposrilanka.com